## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

# 1985 ஆம் ஆண்டின்
# 32 ஆம் இலக்க,
# வறுமை நிவாரணச் சட்டம்

*[1985, ஆகஸ்ட் மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1985, ஓகத்து மாதம் 16 ஆந் தேதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 75* *தபாற் செலவு : சதம் 60*

## 1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, வறுமை நிவாரணச் சட்டம்

[1985 ஓகத்து மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 27/85
1741

**வறுமை நிவாரணத்தைத் திறமையாக ஒழுங்கமைப்பதற்கும் நிருவகிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, வறுமை நிவாரணச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (1) (அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இதனகத்துப்பின்னர் "ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வறுமை நிவாரண ஆணையாளர் ஒருவர் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கப்படலாம். *அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.*

(ஆ) ஆணையாளர் ஒருவர் (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் வரையும், நியமிக்கப்பட்டாலொழியவும், இச்சட்டத்தினால் ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் சமூக சேவைகள் பணிப்பாளரானவர் பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும், அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையுள்ள வறுமை நிவாரண பிரதி ஆணையாளர்களும் உதவி ஆணையாளர்களும் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கப்படல் வேண்டும்.

(3) அரசாங்க அதிபர் ஒவ்வொருவரும், எந்நிருவாக மாவட்டம் தொடர்பில் அவர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்நிருவாக மாவட்டம் தொடர்பில், இச்சட்டத்தினால் பிரதி ஆணையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம். உதவி அரசாங்க அதிபர் ஒவ்வொருவரும் அவர் நியமிக்கப்பட்ட நிருவாகப் பிரிவு தொடர்பில், இச்சட்டத்தினால் உதவி ஆணையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட, அல்லது அவர் மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம்.

(4) இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் பாகம் எதற்கும் பிரதி ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளர் எவரும், (3) ஆம் உட்பிரிவுக்கு அமைய நியமிக்கப்படலாம்.

(5) இச்சட்டத்தினை நிருவகிப்பதில் மேற்சொல்லப்பட்ட அலுவலர்களுக்கு உதவியாயிருப்பதற்கு, அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எழுதுவினைஞர்களையும் சிற்றூழியர்களையும் கொண்ட அத்தகைய பணியாட்டொகுதியும் நியமிக்கப்படலாம்.

அலுவலர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

3. (1) வறுமை நிவாரணப் பிரதி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும், தத்தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், கடமைகளைப் புரிகையிலும் பணிகளை நிறைவேற்றுகையிலும், ஆணையாளரின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(2) வறுமை நிவாரணப் பிரதி ஆணையாளர், மற்றும் உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும், ஆணையாளரின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, தத்தமது நியமன இடப்பரப்பினுள், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆணையாளரின்மேல் அல்லது அவருக்கு அளிக்கப்பட்ட, சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும் அல்லது பணிகளையும் அல்லது அவற்றில் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

இச்சட்டத்தின் ஏற்புடைமை.

4. இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க, வறுமை நிவாரணத்துக்கு விண்ணப்பம் செய்திருக்கின்ற அல்லது வறுமை நிவாரணம்பெற்றுக்கொண்டிருக்கின்ற ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் " இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள் " எனக் குறிப்பீடு செய்யப்படுவர்.

இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளின் வெளிப்படுத்துகை.

5. இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் வறுமை நிவாரணம் வழங்குவதற்கு ஆளொருவர் தகுதியுடையவரா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய ஆளினதும் அவரது வாழ்க்கைத்துணை, குழந்தைகள் மற்றும் வேறு தங்கி வாழுநரதும் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகை ஒன்றினையும் அத்தகைய வேறு தகவலையும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் செய்யுமாறு இச்சட்டம் ஏற்புடைத்தாகும் அத்தகைய ஒவ்வோர் ஆளையும் தேவைப்படுத்துவது ஆணையாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

தகவல் கோருவதற்கு ஆணையாளருக்குள்ள தத்துவம்.

6. ஆணையாளரானவர், 5 ஆம் பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்படும் வெளிப்படுத்துகை எதனிலும் உள்ள கூற்று எதனினதும் செம்மைபற்றி உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தகவலை, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் தமக்குத் தந்துதவுமாறு எழுத்திலான அறிவித்தல்மூலம் ஆளெவரையும் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

வறுமை நிவாரணத்தை நிறுத்துவதற்கு ஆணையாளருக்குள்ள தத்துவம்.

7. இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளெவரினாலும் 5 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளருக்குச் செய்யப்படும் வெளிப்படுத்துகை எதனிலுமுள்ள கூற்றெதுவும் முழுவதாக அல்லது அதன் பகுதியளவிலே பொய்யானதாக அல்லது பிழையானதாக இருக்கின்றதென்றும், அத்துடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்படுகின்ற வறுமை நிவாரணத்துக்கு அத்தகைய ஆள் உரித்துடையவரல்லர் என்றும் ஆணையாளர் திருப்திப்படுகின்றவிடத்து, ஆணையாளர் 11 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, அத்தகைய ஆளுக்கு வழங்கப்படும் வறுமை நிவாரணத்தை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். அத்துடன் எழுத்திலான அறிவித்தல் ஒன்றன்மூலம், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட வறுமை நிவாரணம் எதனதும் பெறுமதியை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் கொடுப்பனவு செய்ய வேண்டுமெனத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

தமது முடிவுபற்றி ஆணையாளர் தெரியப்படுத்துதல்.

8. (1) இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவருக்கு வழங்கப்படுகின்ற வறுமை நிவாரணத்தை நிறுத்துவதென ஆணையாளர் முடிவுசெய்கின்றவிடத்து, தமது முடிவுபற்றி எழுத்தில் அத்தகைய ஆளுக்கு அவர் தெரியப்படுத்துதல் வேண்டும்.

(2) ஏழாம் பிரிவின்கீழ் ஆணையாளரினால் செய்யப்படுகின்ற முடிவு ஒவ்வொன்றும், 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, இறுதியானதாதல் வேண்டும்.

மேன்முறையீடுகள்.

9. (1) ஏழாம் பிரிவின்கீழ் ஆணையாளரினால் செய்யப்படும் முடிவினால் இன்னலுறும் ஆள் எவரும், தமக்கு அத்தகைய முடிவுபற்றித் தெரியப்படுத்திய பதினாலு நாட்களுக்குள் அத்தகைய முடிவுக்கு எதிராக (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரினது அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடொன்று செய்யலாம்.

(2) அத்தகைய மேன்முறையீடொவ்வொன்றும், செயலாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான முறையீடொன்றுமூலம் செய்யப்படல் வேண்டுமென்பதுடன் அது அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைத் தருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தமக்குச் செய்யப்படும் மேன்முறையீட்டையும் கையாளுகையில், செயலாளரானவர், எம்முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ, அம்முடிவை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்.

7 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தொகைகள் அறவிடப்படுவது தொடர்பிலான ஏற்பாடு.

10. (1) இச்சட்டத்தின் கீழ் ஆள் எவருக்கும் வழங்கப்பட்ட ஏதேனும் வறுமை நிவாரணத்தொகையைச் செலுத்துமாறு 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றன்மூலம் அவ்வாள் தேவைப்படுத்தப்பட்டு அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய தொகையை செலுத்த அவர் தவறுகின்றவிடத்து, அல்லது அத்தகைய தொகையைச் செலுத்துமாறு அவரைத் தேவைப்படுத்துகின்ற முடிவுக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டு, அத்தகைய மேன்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்ட முப்பது நாட்களுக்குள் அத்தகைய தொகையைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகையானது தவணை தவறியதாகக் கரு

தப்படல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக எவ்வாறினுல், அத்தகைய தொகை செலுத்தப்படற்பாலதானதோ, அவ்வாளானவர் தவணை தவறுநர் ஒருவராகக் கருதப்படலும் வேண்டும்.

(2) (அ) தொகையெதுவும் தவணை தவறப்பட்டதாக இருக்குமிடத்து, தவணை தவறுநர் வதிகின்ற பிரிவு அல்லது அவருக்குச் சொந்தமாகவுள்ள அசைவுள்ள ஆதனம் எதுவும் அமைந்திருக்கின்ற பிரிவு எதிலும் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றமொன்றுக்கு, தவணை தவறிய தொகையையும், எத்தவணை தவறுநரினுல் அத்தொகையானது செலுத்தப்படற்பாலதானதோ அத்தவணை தவறுநரின் பெயரையும் பற்றிய விபரங்களைக் கொண்டிருக்கின்ற சான்றிதழொன்றை ஆணையாளரானவர் வழங்கலாம்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், நீதிவானுனவர், சான்றிதழில் குறிக்குரைக்கப்பட்ட தொகையை அறவிடுவதற்கு தவணை தவறுநருக்கெதிராக ஏன் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்கு தம்முன் சமுகமளிக்குமாறு அவருக்கு அழைப்புக் கட்டளையனுப்புதல் வேண்டும், அத்துடன் போதுமான அளவு காரணம் காட்டத் தவறுகின்றவிடத்து, அத்தொகையானது, மறியற்றண்டனையால் அல்லாது குற்றப் பணத்தினுல் மட்டும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்காக அத்தகைய தவணை தவறுநர்மீது நீதிவானுல் தண்டனைத்தீர்ப்பு ஒன்றன் மூலம் சுமத்தப்படும் குற்றப்பணம் ஒன்ருகக் கருதப்படல் வேண்டும், அத்துடன் அத்தகைய தவறொன்றுக்கு சுமத்தப்படும் குற்றப்பணமொன்று செலுத்தப்படத் தவறியமை தொடர்பில், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் (அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (ஐ) என்னும் பந்திகள் தவிர) அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டும், அத்துடன் நீதிவானுனவர் அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதிக்கும் நோக்கில் அவ்வுட்பிரிவினது ஏற்பாடுகளின் மூலம் ஆக்கியிருக்கக்கூடிய ஏதேனும் பணிப்புரையை ஆக்கலாம்.

(3) இச்சட்டத்தின் கீழ் ஆணையாளரானவர் சான்றிதழொன்றை வழங்குகின்றவிடத்து, ஆளொருவர்மூலம் அல்லது தபால், அல்லது தந்தி மூலம் அனுப்பப்படும் பதிவுத்தபால்மூலம் தவணை தவறுநருக்கு உடனடியாக அறிவிப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும், ஆனல் தவணை தவறுநர் அத்தகைய அறிவிப்பைப் பெற்றுக் கொள்ளாமை, இப்பிரிவின்கீழ் எடுக்கப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளை வலிதுடையதல்லாததாக்கலாகாது.

தவறுகள்.

11. (1) ஐந்தாம் பிரிவின்கீழ் ஆளெவரினுலும் செய்யப்படுகின்ற வெளிப்படுத்துகை எதனிலும், அத்தகைய ஆளின் அல்லது அவரின் வாழ்க்கைத்துணையின், குழந்தைகளின் அல்லது தங்கிவாழுநரின் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பிலானதும் தம் அறிவுக்கு அது பொய்யானதாய் அல்லது பிழையானதாய் இருக்கின்றதுமான கூற்று எதனையும் செய்கின்ற அவ்வாளானவர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) ஆளெவருக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஆ) அத்தகைய அறிவித்தல் எதனினதும் தேவைப்பாடுகளுக்கிணங்க அறிந்துகொண்டே பொய்யான அல்லது பிழையான தகவல் எதையும் தருகின்ற,

ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுகின்ற ஒழுங்குவிதியெதனையும் மீறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

12. (1) அமைச்சரானவர், பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் :— ஒழுங்குவிதிகள்.

(அ) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லா விடயங்களும்;

(ஆ) தனிநபர் எவருக்கும் அல்லது குடும்பம் எதற்கும் வறுமை நிவாரணம் வழங்குவதற்கான தகுதியுடைமை பற்றிய நிபந்தனைகள்;

(இ) வறுமை நிவாரணத்துக்கான விண்ணப்பம் ஆணையாளருக்கு செய்யப்பட வேண்டியமுறை;

(ஈ) வறுமை நிவாரணம் வழங்கப்படுவதற்கு விண்ணப்பிக்கின்ற ஆட்கள் இணங்கியொழுகவேண்டிய நிபந்தனைகள்;

(உ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்படவேண்டுமென அல்லது ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா அறிவித்தல்கள், வெளிப்படுத்துகைகள் ஆகியவற்றின் மாதிரி;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் வறுமை நிவாரணம் வழங்குவதற்குத் தற்காலிகமாகத் தெரிவுசெய்யப்பட்ட ஆட்களின் பட்டியலைக் காலத்துக்குக் காலம் வெளியிடுதல்;

(எ) அத்தகைய பட்டியல் எதனிலும் எவரேனும் ஆளின் பெயர் சேர்க்கப்படுவதற்கு ஆட்சேபனைகள் செய்யப்படுவதற்கான ஏற்பாடு.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படுகின்ற ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன் அது அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படுகின்ற ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக்கூடியளவு விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்துக்குமுன் கொணரப்படல் வேண்டும். அப்படி அங்கீகாரமளிக்கப்படாத அத்தகைய ஒழுங்குவிதியெதுவும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று எத்தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றது பற்றிய அறிவிப்பானது கசற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.